செ.வெ.எண்.51 நாள்: 30.04.2021

# தூத்துக்குடி மாவட்டம்
# கோவிட் 19 தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள்
# ஊடக அறிவிக்கை (Media Bulletin)

---

தூத்துக்குடி மாவட்டம் மற்றும் மாநகராட்சி பகுதியில் நாளை (01.05.2021) சிறப்பு காய்ச்சல் பரிசோதனை முகாம் நடைபெறும் இடங்கள் - மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா- 19 தீவிர தடுப்பு நடவடிக்கைகளுக்காக நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் கபசுர குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இருவேளை கிருமிநாசினி மூலம் தெளிப்பு தூய்மை பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நடமாடும் மாதிரி சேகரிப்பு வாகனம் மூலம் கொரோனா தொற்று மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேலும் கொரோனா பாதிப்பு கண்டறியும் பகுதிகளில் சிறப்பு காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டம் மற்றும் மாநகராட்சியில் நாளை (01.05.2021) சிறப்பு காய்ச்சல் பரிசோதனை முகாம் நடைபெறும் இடங்கள்

தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் காலை 9 மணிமுதல் 11 மணி வரை **வார்டு எண்:** 57 குமாரசாமி நகர் மெயின், **வார்டு எண்:** 3 ராஜீவ் நகர் - 8வது தெரு (பிள்ளையார் கோவில் அருகில்), **வார்டு எண்:** 20 பூபால்ராயர் புரம் - 2வது தெரு (பத்திரகாளியம்மன் கோவில் அருகில்), **வார்டு எண்:** 3 சின்னகண்ணுபுரம் (அங்கன்வாடி மையம்), **வார்டு எண்:** 33 பாத்திமா நகர் சர்ச் ஆகிய பகுதிகளிலும், காலை 11 மணிமுதல் 1 மணி வரை **வார்டு எண்:** 57 தங்கமணி நகர் மெயின், **வார்டு எண்:** 4 ஸ்டேட் பாங்க் காலனி (வடக்கு மண்டலம் அலுவலகம் அருகில்), **வார்டு எண்:** 20 மாதவன்நாயர் காலனி மெயின், **வார்டு எண்:** 3 VMS நகர்(ICE கிங்ஸ் பள்ளி அருகில்), **வார்டு எண்:** 32 மினி சகாயபுரம் சர்ச் ஆகிய பகுதிகளிலும், பகல் 2 மணி முதல் 4 மணி வரை **வார்டு எண்:** 52 ஐய்யன்கோவில் தெரு மெயின், **வார்டு எண்:** 12 முத்து கிருஷ்ணாபுரம் -6வது தெரு (கல்மண்டப முனியசாமி கோவில் அருகில்), **வார்டு எண்:** 24 காளியப்பர் தெரு மெயின், **வார்டு எண்:** 3 செல்வநாயகபுரம் (விநாயகர் கோவில் அருகில்), **வார்டு எண்:** 45 நியூ காலனி மெயின் ஆகிய பகுதிகளிலும் காய்ச்சல் சிறப்பு முகாம் நடைபெறும்.

கோவில்பட்டி நகராட்சியில் காலை 9 மணிமுதல் 11 மணி வரை வீரவாஞ்சி நகர் பகுதியிலும், காலை 11 மணிமுதல் 1 மணி வரை ஜோதி நகர், இந்திரா நகர் பகுதியிலும், பகல் 2 மணி முதல் 4 மணி வரை அண்ணா நகர் பகுதியிலும், காயல்பட்டிணம் நகராட்சியில் காலை 9 மணிமுதல் 11 மணி வரை போஸ் நகர் பகுதியிலும், காலை 11 மணிமுதல் 1 மணி வரை LR நகர் பகுதியிலும், பகல் 2 மணி முதல் 4 மணி வரை லெட்சுமிபுரம் தெரு பகுதியிலும் காய்ச்சல் சிறப்பு முகாம் நடைபெறும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஊராட்சி பகுதிகளில் காலை 9 மணிமுதல் 11 மணி வரை வாகைகுளம், சிவகளை பரம்பு, கல்விளை, மணக்கரை, வடக்கு தெரு - அடைக்கலாபுரம், ஜே ஜே நகர், ஆத்தூர், அகப்பைகுளம், நாசரேத், அனுகூலபுரம், குலசேகரபட்டணம் வடக்கூர், அடைக்கலாபுரம், தெற்கு பன்னம்பாறை, சாலைபுதூர், சூர்யாமினிக்கன், ரெட்டியாபட்டி, வீரபாண்டியபுலிக்குளம், வௌவால்தொத்தி ஆகிய பகுதிகளிலும், 11 மணிமுதல் 1 மணி வரை வர்த்தகரெட்டிபட்டி, நயினார்புரம் - சிவகளை, மணல்விளை, அனந்தநம்பிகுறிச்சி, கந்தசாமிபுரம் - திருச்செந்தூர், வடக்கு ஆத்தூர், பிரதர் தெரு, நாசரேத், முத்துநகர், உடன்குடி, தாண்டவன்காடு, மாதவன்குறிச்சி, வடக்கு உடைபிறப்பு, வேதகோயில் தெரு - பன்னம்பாறை, வலசால்பட்டி, மாதராசிபுரம், மலைப்பட்டி, ரகுராமபுரம் ஆகிய பகுதிகளிலும், பகல் 2 மணிமுதல் 4 மணி வரை தாளமுத்துநகர், நடுத்தெரு - சிவகளை, தாதன்குளம், உடையார்குளம், சர்ச் தெரு - அடைக்கலாபுரம், யாதவர் தெரு - ஆத்தூர், திருவள்ளுவர் காலனி - நாசரேத், புதுமனை - குலசேகரபட்டிணம், காரங்காடு - மாதவன்குறிச்சி, புதூர், தைலாபுரம், EB காலனி - வில்லிசேரி, வெள்ளாளன்கோட்டை, லெக்கம்பட்டி, பரிவல்லிக்கோட்டை, புதுப்பட்டி ஆகிய பகுதிகளில் காய்ச்சல் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரும் மேற்கண்ட முகாம்களில் தவறாது கலந்து கொண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா-19 தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைக்கு 1077 கட்டணமில்லா தொலைபேசி எண் மூலமும் 0461-2340101 மற்றும் 9486454714 ஆகிய தொலைபேசி எண்களிலும் பொது மக்கள் கொரோனா நோய்த் தொற்று குறித்து தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.